# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை 28.10.2025 கதிர் 353



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel







## செம்மணியில் நீதி கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 28

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணம் - செம்மணி வளைவுக்கு அருகில் இன்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை மற்றும் நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக் குழு ஆகியவை இணைந்து முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில் மதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் கலந்துகொண்டு செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரினர்.

# மாகாணத் தேர்தலை நடத்துவதில் தேசிய மக்கள் சக்தி அரசு தீவிரம்

## விரைவில் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம்

கொழும்பு, ஒக். 28

மாகாண சபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஒரு முக்கிய நகர்வாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் நலன் சார்ந்த பாதீடாக முன்வைப்பதற்கு அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

மக்களுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தும் விதத்தில் புதிய வரிகள் எதுவும் அமுல்படுத்தப்படமாட்டாது எனத் தெரியவருகின்றது.

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள குழுக்கள் ஒடுக்கல் போன்ற செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் அரசுக்கு ஆதரவு ஏற்பட்டுள்ளது.

இதனையும் ஒரு வாய்ப்பாகக் கருதி விரைவில் தேர்தலுக்குச் செல்வதற்கு அரசு எதிர்பார்க்கின்றது.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக பாதீட்டு கூட்டத் தொடருக்கு மத்தியில் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் ஜனாதிபதி நடத்தவுள்ளார்.

எந்த முறையில் தேர்தலை நடத்துவது என்பது பற்றி உறுதியான முடிவொன்றை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது.



## மன்னார் மக்களுக்காக களத்தில் இறங்கியது மெதடிஸ்த திருச்சபை




யாழ்ப்பாணம், ஒக். 28

மன்னார் காற்றலை மின் உற்பத்தி ஆலை விவகாரம் மக்களின் நலன்களுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முதன்மை கொடுக்கப்பட வேண்டும் என்று

7➤

## வெலிகம தவிசாளர் சுட்டுக்கொலை: சந்தேகநபர்களில் மூவருக்கு மறியல்!



கொழும்பு, ஒக். 28

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர என்பவர் கடந்த 22 ஆம் திகதி காலை வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் மூவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரும் இன்று செவ்வாய்க்கிழமை

7➤

## அரசுக்கு எதிரான கூட்டுப் பேரணி: ஐக்கிய மக்கள் சக்தி கைவிரிப்பு!




கொழும்பு, ஒக். 28

நுகேகொடையில் எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அநுர அரசுக்கு எதிரான பேரணியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் சுஜீவ சேனசிங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எனினும், அநுர அரசின் ஒடுக்குமுறை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கட்டடங்களை நிர்மாணிக்கும்போது பிரதேச சபையின் அனுமதி அவசியம்!



வேலணை, ஒக் .28

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் எந்தவொரு தரப்பினரானரும், கட்டடங்களை நிர்மாணிக்கும் போது பிரதேச சபையின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிபெற்று கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும் என வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பிரதேச சபையின் ஆளுகைக்குள் பல்வேறு கட்டுமாணங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதில் பல முறையான அனுமதி பெற்று நிர்மாண வேலைகளை முன்னெடுக்கவில்லை என தகவல்களூடாக உறுதிசெய்ய முடிகின்றது.

இவ்வாறு முறையான அனுமதி பெறாது நிர்மாணிக்கப்படும் கட்டுமாணங்கள் சட்டமுறையற்ற கட்டுமாணங்கள் என்றே கருத்தில் கொள்ளப்படும்.

அத்துடன் அவ்வாறு அடையாளப்படுத்தப்படும் கட்டுமாணங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் நிலையும் உருவாகும்.

எனவே 1987 ஆம் ஆண்டு 15 இலக்க பிரதேச சபைகள் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டம் ஆகியாற்றின் அடிப்படையில்,

01. பிரதேச சபையில்.கட்டட அனுமதிக்கான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளல்.

02. அமைவுச் சான்றிதழ் அல்லது கால நீடிப்பு அனுமதியை பெறுதல்.

03. காணி உப பிரிவிடல் மற்றும் காணி ஒருங்கிணைத்தல்அனுமதியினை பெற்றுக்கொள்ளல்.

04. நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்குமான அனைத்து ஆவணங்களையும் சமைப்பித்தல் போன்ற நடைமுறையை பின்பற்றி கட்டடங்களுக்கான நிர்மாண அனுமதியை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இதே நேரம் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டுமாணங்களால் அண்மைக்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றி பல முரண்பாடுகளை எது உருவாக்கி வருவதால் இந்த நடைமுறையை வேலணைபிரதேசஆளுகைக்குள்கட்டுமாணங்களை மேற்கொள்வோர் பின்பற்றுவது அவசியமாகும் எனதுடன் அவ்வாறு பின்பற்ற தவறும்.பட்சத்தில் சட்ச நடவடிக்கை எடுக்க பிரதேச சபை நிர்ப்பந்திக்கப்படும் என தெரிவித்தார். ஐ)

## பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

கொழும்பு, ஒக் .28

யாழில் சட்டவிரோதமாக சொத்துக்களை சேகரித்த 11 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

11 பேர் மட்டும் அல்லாமல் மேலும் பலருக்கு எதிராக இவ்வாறு வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

பொதுமக்களிடம் பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில், சட்டவிரோதமாக சொத்துக்களை குவித்தவர்கள், போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்பில் உள்ளவர்களுக்கு எதிராக இவ்வாறு நடவடிக்கை எடுக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.(ஐ)

## 233,200 வெளிநாட்டு சிகரெட்டுகள் பறிமுதல்

*கொழும்பு, ஒக் .28*

*இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி, நேற்று (26) களனி சிறப்பு அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, நீர்கொழும்பு, போலவலான, மடமா வீதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து 233,200 வெளிநாட்டு சிகரெட்டுகள்பறிமுதல்செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.*

*மேலும், குறித்த சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# குறிஞ்சாக்கேணிக்கான பாதுகாப்பான படகு பாதை பயணம் ஆரம்பம்





கிண்ணியா, ஒக் .28

கிண்ணியா மற்றும் அதனை சுற்றியுள்ள பொதுமக்களுக்கு மிகவும் அவசியமான தேவையாக இருந்த, குறிஞ்சாக்கேணி கடல் நீர்ப்பரப்பில் பயணிப்பதற்கான படகுப்பாதையான "கங்கை" என்ற பெயரிடப்பட்ட பாரிய படகு பாதையின் பயணம்,பிரதி அமைச்சர்அருண் ஹேமச்சந்ராவால் திங்கட்கிழமை (27) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2021 நவம்பரில்பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டு விலைமதிப்பற்ற உயிர்களை காவு கொண்ட துயரமான கிண்ணியா படகு விபத்துக்குப்பின்னர் தற்போது இப்படகு பாதை சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படவுள்ள "கங்கை" என்ற இப்புதிய படகுப்பாதை,சவுதி அரேபிய அரசின் 1.05 பில்லியன் நிதியுதவியுடன் இவ் கடற்பகுதியில் கட்டப்படவுள்ள நிரந்தர பாலம் கட்டுமான நிர்மாணத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இப்படகுப் பாதை 45 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

டால்பின் மரேன் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் எட்வர்ட் ரூ கிறிஸ்டி (பிரைவேட்) லிமிடெட் என்ற இரண்டு தனியார் கம்பனிகளின் கூட்டு முயற்சியாக நிர்மாணிக்கப்பட்ட இந்தப் படகு பாதை, நவீன பொறியியல் நுட்பங்களுடன் வடிவமைக்கப்பட்டு முழுமையான உயிர்காக்கும் வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை கொண்டதாக உள்ளது.

நிகழ்வில் பேசிய பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர "திருகோணமலை மாவட்டம் மற்றும் கிண்ணியா பிரிவுகளின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற முறையில்,நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்தத் திட்டம் உயிர் பெறுவதைக் கண்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இது நமது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான போக்குவரத்து முறையை உறுதி செய்கிறது.

இது வெறும் உள்கட்டமைப்புத் திட்டம் மட்டுமல்ல. நம்பிக்கையை மீட்டெடுப்பது,பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் இந்த நீர் நிலைகளைக் கடக்கும் ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்தையும் நிலைநிறுத்துவது உறுதிப்படுத்துகின்றது".

"நாம் முன்னேறும்போது,கடந்த காலத்தை நினைவில் கொள்கிறோம். எதிர்காலத்தை குறித்து சிந்திக்கின்றோம். திருகோணமலை மாவட்டம் அனைவருக்கும் பாதுகாப்பானதாகவும்,சிறந்த ஒருங்கிணைப்பிற்குரியதாகவும் அமைய வேண்டும். மாவட்டத்தை அனைவருக்கும் சம வாய்ப்புகள் நிறைந்ததாக மாற்றுவதில் எமது அரசாங்கம் உறுதியாக இருக்கிறது" என்றார். (ஐ)

# தங்க விநியோக மோசடி: வெளியான தகவலை மறுக்கும் ஹிஸ்புல்லாஹ்



தங்க விநியோகம் தொடர்பான மோசடியில் தாம் 2 மில்லியன் டொலர்களால் ஏமாற்றப்பட்டதாக வெளியான செய்தியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மறுத்துள்ளார்.

கானா நாட்டின் ஊடகங்களில் வெளிவந்த அந்த செய்தி இலங்கையின் ஊடகங்களிலும் நேற்று இரவு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், குறித்த செய்தியை ஹிஸ்புல்லாஹ்வின் ஊடகப் பிரிவு முற்றிலும் மறுத்துள்ளது.

அந்தச் செய்தியில் எவ்விதமான உண்மைத்தன்மையும் இல்லை என்று அவரின் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.


அத்துடன், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வியாபார நோக்கத்திற்காக சவூதி அரேபியாவைச் சேர்ந்த நண்பர்களுடன் கானா நாட்டிற்குச் சென்றிருந்தார்.

என்றும்,அங்கே சிலர் மோசடி செய்ய முயன்றதை அறிந்த அவர், உடனடியாக இது குறித்து அந்த நாட்டின் பொலிஸில் முறைப்பாடு செய்தார் என்றும் அவரின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்தே ஏமாற்ற முயன்றதாக கூறப்படும் 11 பேரையும் கானா நாட்டின் பொலிஸார் கைது செய்தனர் என்றும் ஹிஸ்புல்லாஹ்வின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தவிர, ஹிஸ்புல்லாவுக்கும் இந்த மோசடி விவகாரத்திற்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை என்றும் அவரின் ஊடகப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# ராமேஸ்வரம் – தலைமன்னாருக்கு இடையில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கப்பல் பாதை..!




இந்தியாவின் ராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு இடையே புதிய கப்பல் பாதையை ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியாவும் இலங்கையும் கலந்துரையாடியுள்ளன.

மும்பையில்நடைபெற்ற 2025ஆம் ஆண்டு இந்திய கடல்சார் வாரத்தின் போது, இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் சர்பானந்த சோனோவால், இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுரா கருணாதிலகவுடன் ஆகியோருக்கு இடையில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தபுதியகப்பல்பாதையைதிறப்பதன்மூலம் இந்தியா - இலங்கை கடல்சார் இணைப்பை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இந்த சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டதாகவும் இந்திய ஊடகம் கூறுகிறது.

அத்துடன் இரண்டு நாட்டு மக்களிடையேயான தொடர்பை மேலும் ஆழப்படுத்துவது குறித்தும் இரண்டு நாட்டு அமைச்சர்களும் பேசியுள்ளதாக தெரியவருகின்மையும் குறிப்பிடத்தக்கது(ஐ)



# இலங்கையும் அவுஸ்திரேலியாவும் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்து

இலங்கையும் அவுஸ்திரேலியாவும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான இருதரப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நிகழ்வு, நேற்று நிதியமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கும், மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிப்பதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் ஹர்ஷனா சூரியப்பெரும, இலங்கை சார்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

கையொப்பமிடப்பட்ட ஆவணங்களை சூரியப்பெரும மற்றும் இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உயர் ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த் ஆகியோர் அதிகாரப்பூர்வமாக பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிலையில், ஆக்கபூர்வமான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம், நிலுவையில் உள்ள கடன் கடமைகளை மறுசீரமைத்து, இலங்கைக்கு கடன் நிவாரணத்தை வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம், இந்த உடன்படிக்கை மூலம் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்களின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட மொத்த கடன், 39 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாவை சேனாதிராசாவின் ஜனன தினத்தை முன்னிட்டு மரநடுகை



மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவருமான மாவை சேனாதி ராசாவின் 83 வது ஜனன தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தமிழரசுக் கட்சி தொகுதிக்கிளையினரால் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது. நேற்றையதினம நண்பகல் 12.00 மணியளவில் வலி வடக்கு தச்சன்காட்டு சந்திக்கு அண்மித்த பகுதியில் வீதியின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டது. இந்த நிகழ்வில் வலி வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன், வலி வடக்கு தமிழரசுக் கட்சிசார் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் போன்றோர் கலந்துகொண்டனர். (ஐ)

# சென்னை மெட்ரோவில் விபத்துகள் ஏற்படாத வண்ணம் தடுக்க “Anti Drag Feature” என்ற புதிய வசதி அறிமுகம்!!



சென்னை மெட்ரோ ரயிலில் விபத்துகள் ஏற்படாத வண்ணம் தடுக்க புதிய வசதி விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இது தொடர்பாக மெட்ரோ நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின், முதல் கட்டத்தில் இயங்கும் மெட்ரோ இரயில்களின் அனைத்து பெட்டி கதவுகளிலும் **“Anti Drag Feature”** நிறுவுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், முதல் கட்டத்தில் இயங்கும் 52 மெட்ரோ இரயில்களின்அனைத்து பெட்டி கதவுகளிலும் **“Anti Drag Feature”** நிறுவுவதற்கான ஒப்பந்தத்தை **Faiveley Transport Rail Technologies India Private** நிறுவனத்திற்கு ரூ.48.33 கோடி (ஜிஎஸ்டி உட்பட) மதிப்பில் வழங்கியுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. மனோஜ் கோயல் முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் திரு.ஏ. ஆர். ராஜேந்திரன் (மெட்ரோ இரயில், சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு), மற்றும் குயளைநடநல வுசயளெிழசவ சுயடை வுநஉாழெடழபநைள ஐனெயை ீசளையவந நிறுவனத்தின் இயக்குநர் திரு. புனீத் மெஹ்ரோத்ரா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் திரு. சி. பாலமுருகன் (மெட்ரோ இரயில்), சென்னை மெட்ரோஇரயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர். கவை பலப்படுத்தும் ராமதாஸ்: இழந்த அங்கீகாரத்தை மீட்க முயற்சி’

பயணிகளின்பாதுகாப்பை மேம்படுத்தவும், சிறந்த சேவை வழங்கும் தொடர்ச்சியான முயற்சியின் ஒருபகுதியாக, நீல வழித்தடம் மற்றும் பச்சை வழித்தடங்களில் இயங்கும் மெட்ரோ இரயில்களின் அனைத்து பெட்டி கதவுகளிலும் **‘Anti Drag Passenger Door Safety System’** எனப்படும், “கதவில் சிக்கிக்கொண்டு இழுத்துச் செல்வதைத் தடுக்கும் பயணிகள் பாதுகாப்பு அமைப்பிற்கான” வடிவமைப்பு **(Design)**, பொருட்கள் வழங்குதல் **(Supply)>** நிறுவுதல் **(Installation)**, சோதனை செய்தல் **(Testing)**, செயல்பாட்டிற்கு கொண்டு வருதல் போன்றவை இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் ஆகும்.

தற்போது, மெட்ரோ இரயில்களின் கதவு அமைப்புகள் தானியங்கி கதவுகளைக் **(Automatic sliding doors)** கொண்டுள்ளன, இவை தடைகளைக் கண்டறியும் அமைப்புடன் **(Obstacle detection system)** இணைக்கப்பட்டுள்ளன. பயணிகள் ஏறி முடித்தவுடன், நிலையங்களில் கதவுகள் மூடும்போது, கதவுகளுக்கு இடையூறாக இருக்கக்கூடிய பொருட்களை இந்த அமைப்பு கண்டறியும்.

பயணிகளின் பாதுகாப்பை மேலும் மேம்படுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, **Anti-Drag System** உடன் கூடிய மேம்பட்ட தொழில்நுட்பத்தை நிறுவ உள்ளது. இதன் மூலம், மெட்ரோ இரயிலில் இருந்து இறங்கும்போது தவறுதலாக கதவுகளுக்கு இடையில் சிக்கிக் கொள்ளக்கூடிய சேலைகள், பெல்ட்கள், பைபட்டைகள், பாட்டில் பட்டைகள் போன்ற மெல்லிய பொருட்களையும் கண்டறிய முடியும்.

இந்த புதிய அமைப்பின் தனிச்சிறப்பு என்னவென்றால், இது இழுத்துச் செல்லும் **(pull and drag force)** விசையைக் கண்டறியும் திறன் கொண்டது. ஒரு நபர் அல்லது பொருள் கதவில் சிக்கிக் கொண்ட நிலையில் மெட்ரோ இரயில் நகரத் தொடங்கும்போது அது இழுக்கப்பட்டால், இந்த அமைப்பு அதைக்கண்டறியும். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும் போது, மெட்ரோ இரயில் தானாகவே அதன் அவசரகால பிரேக்கை **(emergency brake)** போட்டு, மெட்ரோ இரயிலை உடனடியாக நிறுத்திவிடும். அதுமட்டுமின்றி, இது உடனடியாக மெட்ரோ இரயில் ஓட்டுநரின் பார்வைக்கு அனுப்பப்படும். இதன் மூலம் ஓட்டுநர் விரைவாகவும் உடனடியாகவும் நடவடிக்கை எடுக்க முடியும்.

சென்னை மெட்ரோ இரயில்களில் இதுவரை கதவில் யாரும் சிக்கியதால் விபத்துகள் எதுவும் நடக்கவில்லை. இருந்த போதிலும், இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு ஏற்பாடு ஆகும். இதன் மூலம், குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்பை மேலும் உறுதிசெய்து, அனைத்துப் பயணிகளுக்கும் உயர்ந்த தரமான பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்கிறது.

இந்த வசதியானது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக கொள்முதல் செய்யப்படும் மெட்ரோ இரயில்கள் அனைத்திலும் ஒரு நிலையான அம்சமாக இணைக்கப்பட்டுவருகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது அமைப்புகளைத் தரம் உயர்த்துவதிலும், பயணிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்வதிலும் தொடர்ந்து உறுதியுடன் உள்ளது.”இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அயோத்தியில் ராமர் கோயிலில் அனைத்து கட்டுமான பணிகளும் நிறைவு பெற்றது: அறக்கட்டளை அறிவிப்பு



அயோத்தியில் ஸ்ரீராம் ஜன்ம பூமி தளத்தில் அனைத்து கோயில் கட்டுமான பணிகளும் நிறைவடைந்துள்ளதாக ஶ்ரீராம் ஜன்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை தெரிவித்துள்ளது. உத்தரப்பிரதேசம் அயோத்தில் உள்ள ஸ்ரீராம் ஜன்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில்,” ஶ்ரீராமின் அனைத்து பக்தர்களுக்கும் கோயில் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளதாக மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். பிரபு ஶ்ரீராம் லல்லாவின் பிரதான சன்னதி உட்பட அனைத்து கோயில் கட்டுமான பணிகளும் நிறைவடைந்துள்ளது. மகாதேவ், விநாயகர், ஹனுமான், சூர்யதேவ், பகவதியம்மன் மற்றும் அன்னபூரணி ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரதான ராமர் கோயில் வளாகத்தில் உள்ள ஆறு கோயில்கள் மற்றும் பிற சேஷாவதாரம் மந்தீர் ஆகியவை முடிக்கப்பட்ட கட்டுமானங்களில் அடங்கும்.

இந்த கோயில்களில் கொடிமரம் மற்றும் கலசம் நிறுவப்பட்டுள்ளது. வால்மீகி, வசிஷ்டர், விஸ்வாமித்திரரர், அகத்தியர், நிஷாத்ராஜ், ஷ பரி மற்றும் தேவி அகல்யா ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட 7 மண்டபங்களும்முழுமையாக கட்டப்பட்டுள்ளன.சாந்த் துளசிதாஸ் மந்திரும் நிறைவடைந்துள்ளது. மேலும் ஜடாயு மற்றும் அணில் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன” என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் ஆணையம் தற்போது 12 மாநிலங்களில் “வாக்கு திருட்டு” விளையாட்டை ஆடத் தயாராகியுள்ளது: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு




*தேர்தல் ஆணையம் தற்போது 12 மாநிலங்களில் “வாக்கு திருட்டு” விளையாட்டை ஆடத் தயாராகியுள்ளது என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை குற்றசாட்டு வைத்துள்ளார். இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறுகையில், பீஹாரில், ளுஐசு என்ற பெயரில் 69 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன. இப்போது, 12 மாநிலங்களில் கோடிக்கணக்கான வாக்குகள் நீக்கப்படும். இது நரேந்திர மோடியும் தேர்தல் ஆணையமும் இணைந்து நடத்தும் வெளிப்படையான “வாக்கு திருட்டு” செயல். பீஹாரில் ளுஐசு நடத்தப்பட்டபோது, தேர்தல் ஆணையத்தின் சூழ்ச்சி நாடு முழுவதும் வெளிச்சமிட்டது.*

*உச்ச நீதிமன்றமே கூட இதுகுறித்து தேர்தல் ஆணையத்தை கடுமையாக கண்டித்தது. நாடு முழுவதும் “வாக்கு திருட்டு” பல வடிவங்களில் வெளிப்படுகிறது. சில இடங்களில் திட்டமிட்டவாறு வாக்குகள் சேர்க்கப்படுகின்றன் சில இடங்களில் திட்டமிட்டவாறு நீக்கப்படுகின்றன. இவை அனைத்துக்கும் பதில் அளித்து, விசாரணை நடத்தியிருக்க வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை. ஆனால், அதற்கு மாறாக அது “வாக்கு திருட்டு” சதியின் ஒரு பங்காக மாறியுள்ளது. 12 மாநிலங்களில் நடத்தப்படும் ளுஐசு ஜனநாயகத்திற்கு எதிரான – மக்களின் உரிமைகளைப் பறிக்கும் ஒரு சதி என குறிப்பிட்டுள்ளார். (ஐ)*

# “சூது கவ்வும்” பழமொழி செய்யும் குழப்பம்

“தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மறுபடியும் தர்மம் வெல்லும்”

பழமொழி காலம் காலமாக பலராலும் சொல்லப்பட்டு வருகிறது

தர்மம் என்பது எது? என்பதுதான் சிக்கலே, பிறருக்கு தானம் செய்வது தர்மமா? அப்படி என்றால் தானம் தருவது தங்களுடைய பொன், பொருள் பணத்திலிருந்தா, இல்லை தன் சொந்த உழைப்பின் சம்பாத்தியத்திலிருந்தா? இல்லை அடுத்தவர் பணத்திலிருந்தா?



இங்கு தர்மம் என்பது ஒரு “செயலை” குறிப்பிடின் அந்த செயல் உண்மையின் அடிப்படையில் சொல்லப்படுகிறதா? உண்மை என்பதன் அளவு கோல் என்ன? இல்லை அந்த செயல் பிறரால் புகழப்பட்டு அதன் பின் அந்த செயலுக்கான வினைப் பயனான தீவினையை (பாழ்படுத்தியவர்களை) “சூது கவ்வி விட்டது” என்று சொல்வதா?

சமூகத்தின் நியதிப்படி நியாயம் எது? அநியாயம்எது? என்பதை முன்னர்வாழ்ந்தவர்கள் அல்லது பெரியவர்கள் வரையறுத்து வைத்துள்ளார்கள் என்று நம்புகிறோம். அந்த நியதிப்படி அவைகளை நியாயம், அநியாயம் என்று வரையறுத்து விடுகிறோம்.

கற்றவர்கள் சமூகத்தை மாற்ற நினைப்பவர்கள், (இல்லாவிட்டால் அடுத்த தலைமுறை)என்றுஎடுத்துகொள்வோம். மக்கள் சமமாக வாழ வேண்டும்என்று நினைப்பவர்கள், பெண்கள் சம உரிமையுடன் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள், அவர்கள் வகுத்த சமூக நியதிகள் இதை கடைபிடிக்க நினைத்தால் சில இடங்களில் கவனிக்கவும், சில இடங்களில் முன்னர் வாழ்ந்த (பெரியவர்கள்) கடை பிடித்தவைகள் இவர்களின் கொள்கைப்படி அர்த்தமில்லாதவைகளாக ஆகி விடுகிறது என்று வைத்து கொண்டால், அவர்களின் (முன்னோர்கள்) கூற்று “சூது கவ்வியது” என்று அவர்களால் கூறப்படும்.

இரு சாராருக்கும் அதாவது முன்னர் வாழ்ந்த அல்லது கடைபிடித்த சமூக பழக்க வழக்கங்கள், அடுத்து அந்த பழக்க வழக்கங்களை மாற்றி மக்கள் இப்படியும் வாழலாம் என்று கற்றவர்கள் (படிப்பு) சொல்பவர்கள் இருவரும் பொதுவாக சொல்லும் சமூக பழக்கங்கள், இதை இருசாராரும் தர்மம் என்று சொல்வார்களேயானால், அடுத்து வரும் தலைமுறை ஏற்படுத்தும் சமூக மாற்றங்களை இந்த இரு சாராரும் “சூது கவ்வும்” என்று சொல்வார்களா?

எது எப்படியோ இத்தனை குழப்பங்கள் தேவையில்லை, ஒரு மனிதான் தான் செய்தது சரியானது, அதை தண்டனைக்குரிய குற்றமாக்கி அதற்கான தண்டனையை, எதிராளி வாங்கி கொடுத்து விடுகிறான் என்று வைத்து கொள்ளுங்கள், அப்பொழுது பாதிக்கப்பட்டவன் சொல்லுவான் தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்”

இங்குதர்மம்என்பது அவனது செயலை நியாயப்படுத்த சொல்லப்படு கிறது.

சின்ன உதாரணத்தை குறிப்பிடலாம், ஒருவர் பொது நலன் கருதி தங்களது வீதியை சுத்தப்படுத்த முயற்சிக்கிறார். அப்பொழுது அந்த வீதியில் இருந்த கடைசி வீட்டருகில் குப்பைகள் குவிந்து விட்டது. அதை சுத்தம் செய்தவர் கவனிக்காமல் இருக்க வேண்டும், அல்லது அவர் கொஞ்ச நாள் “அட்ஜஸ்ட்” பண்ணட்டும் என்று நினைத்திருந்தால்..!

இலவசமாய் அவர் தனது தெருவை சுத்தம் செய்தது தர்மமான செயலாக கொண்டோமென்றால் அதனால் ஏற்பட்ட விளைவு கடைசி வீட்டில் குப்பைகள் சேர்ந்து போனது அதர்மமாக ஆகி விடுகிறதே?

சரி வீதியை சுத்தப்படுத்தியவரே அந்த கடைசி வீட்டு குப்பையை அகற்ற ஏற்பாடு செய்து விடுகிறார். இது அறமான செயல், என்றாலும் அந்த வீதியில் வசித்த மக்கள் (கடைசி வீட்டார் உட்பட) இந்த சுத்தப்படுத்தும் வேலையை தினமும் இவரே செய்ய வேண்டும் என்று நினைப்பது தர்மமா? அதர்மமா? முடியாது என்று அவர் மறுப்பாயின் ‘சூது கவ்வும்’ என்று வீதியில் இருப்போர் அனைவரும் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியுமா? காதை கொடுங்கள் அதையும் சரி என்று ஏற்று கொள்பவர்களும் உண்டு. அவர்களின் செயல்பாட்டின்படி (தர்மம்) சூது கவ்வியது. இது போலத்தான் ஒவ்வொருவரும் தான் கொண்ட எண்ணத்தின்படி நடக்காமல் வேறு விதமாக அதுவும் இவரை பாதிக்கும் வண்ணம் இருந்தால் அவரின் கோபமான சொல் “தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்”

இங்கு வாழ்வு என்பது வாழ்க்கையை குறிப்பிடுவதல்ல, செயலை குறிப்பிடுகிறது.



அரசியல்வாதிகள், தங்களது பிரச்சாரத்தில் பொது வெளியில் அடிக்கடி உபயோகிப்பது இந்த வார்த்தைகளைத்தான்.

இன்னும் ஒரு உதாரணமாக சொல்லலாம், ஒருவரின் செயல்பாட்டால், பல உயிர்கள் பலியாகிவிட்டது, இது கண்கூடாக நடந்த ஒரு விபத்து என்று வைத்து கொண்டால், அந்த ஒருவர் இது தன்னை வைத்து இந்த செயலை வேறொருவர் செய்து தன் புகழை கெடுக்க நினைக்கிறார் என்று சொல்கிறார். அதற்காக அவர் பொது வெளியில் “சூது கவ்வியது” என்று நம்ப வைக்க முயற்சி செய்கிறார்.

இது எப்படி? நாங்கள் பார்க்கும்போதுதானே, நிகழ்ந்தது என்று பொதுவான கருத்து நிலவினாலும், அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கும், அப்படியும் இருக்குமில்லையா? என்று இன்னொரு கூட்டம் நினைக்கும் போது..! எந்த தர்மத்தின் மீது சூது கவ்வியது?

யார் இந்த தர்மத்தை (செயல்பாட்டை) சூது



கவ்வியது என்று முடிவு செய்கிறார்கள்?

இன்றைய சமூகத்தில் யாராவது மனம்வெறுத்து “தர்மத்தினை சூது கவ்வியது” என்று சொன்னால், அதை பார்த்தும் கேட்டும் கொண்டிருக்கிற நம்மில் வரும் சந்தேகம் இவரது தர்மம என்பது என்ன? அதை மற்றொருவர் (ஏ)மாற்றியதால் என்றால் அவரின் தர்மம் (செயல்) என்ன ? இரண்டையும்பொருத்திபார்த்துநாம்ஒரு முடிவுக்கு வருவதற்குள், நமக்கு வேறு வேலை இருக்கிறது என்று கடந்து போக நினைக்கிறோம். அதை செயல்படுத்த முயற்சிக் கையில் சண்டையிட்டு கொண்டிருக்கும் இரு சாராரிடமிருந்து வரும் கேள்வி இதை வேடிக்கை பார்த துட்டு போய்கிட்டிரு க்கற நீங்களெல்லாம்.?

மூன்றாவது தர்மம் அங்கே முளைத்துவிட்டது.

சொன்னவர் ஒன்றென்றால், எதிர் கொண்டவர் இரண்டாவது, என்றால் அதை கண்டும் காணாமல் போய்க்கொண்டிருக்கும் நாம் மூன்றவது நபர் ஆகி விடுகிறோம்.

# பேச்சு சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் அமெரிக்காவின் இருண்ட நாட்கள்: முன்னாள் அதிபர் பைடன் விமர்சனம்



அமெரிக்க மாஜி அதிபர் ஜோ பைடனுக்கு சிறுநீர் பையில் புற்று நோய் பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து பிலடெல்பியாவில் உள்ள மருத்துவமனையில் கதிர்வீச்சு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை முடிந்த நிலையில், எட்வர்டு கென்னடி மையம் சார்பில் வாழ்நாள் கால சாதனையாளர் விருது பைடனுக்கு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. இந்த விழாவில் ஜோ பைடன் பேசும்போது: வரையறுக்கப்பட்ட அதிகாரம் கொண்ட அதிபர் பதவி, செயல்படும் நாடாளுமன்றம் மற்றும் தன்னாட்சி உடைய நீதித்துறையை அமெரிக்கா சார்ந்துள்ளது. பெடரல் அரசு அதன் இரண்டாவது மிக நீண்ட முடக்கத்தை எதிர்கொண்டுள்ளது. டிரம்ப் அரசாங்கத்தின் மீது புதிய கட்டளையைப் பயன்படுத்துவதற்கான ஒரு வழியாக நிதி இழப்பைப் பயன்படுத்தியுள்ளார். நண்பர்களே, இதில் எதையும் நான் மறைக்க முடியாது. பேச்சு சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் நிர்வாக அதிகார வரம்புகள் மீதான சோதனைகள் அதிகரித்துள்ளன. அரசின் நடவடிக்கையை எதிர்த்து ஊழியர்கள் ராஜினாமா செய்துள்ளனர். இவை இருண்ட நாட்கள் ஆகும். அதில் இருந்து மக்கள் மீண்டு எழ வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

## மடகாஸ்கரில் முன்னாள் அதிபரின் குடியுரிமை பறிப்பு



மடகாஸ்கரில் அதிபரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு ராணுவ ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் முன்னாள் அதிபரான ராஜோலினா நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் அவர் எங்கு இருக்கிறார் என்பது உள்ளிட்ட விவரங்கள் முழுவதுமாக தெரியவில்லை. மேலும் அவரிடம் பிரான்ஸ் குடியுரிமையும் உள்ளது. இந்நிலையில் நாட்டின் புதிய பிரதமர் ஹெரிண்ட்சலமா அனைத்து மடகாஸ்கர் மக்களுக்கும் வேறு ஒரு நாட்டின் குடியுரிமை இருந்தால் அவர்களின் குடியுரிமையை பறிக்கும் சட்டங்களை இயற்றும் ஆணையில் கையெழுத்திட்டுள்ளார். இதனை தொடர்ந்து முன்னாள் அதிபர் ராஜோலினாவின் குடியுரிமை பறிக்கப்பட்டுள்ளது. (ஐ)



மேற்கு துருக்கியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் - ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது. இஸ்தான்புல், பர்சா, மணிசா, இஸ்மிர் ஆகிய மாகாணங்களில் அடுத்தடுத்து நில அதிர்வுகள் ஏற்பட்டன. சக்திவாய்ந்த நிலநடுக்கம் மற்றும் அடுத்தடுத்த நில அதிர்வுகளால் பல கட்டிடங்கள் சேதமடைந்தது.

## 30 நிமிடங்களில் அடுத்தடுத்து விபத்து கடலில் விழுந்த அமெரிக்க போர் விமானம், ஹெலிகாப்டர்




அமெரிக்க கடற்படையில் விமானம் தாங்கி கப்பலில் இருந்து 30 நிமிடங்களில் போர் விமானம், ஹெலிகாப்டர் தென்சீனக்கடலில் விழுந்தது. ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் வணிக கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களுக்கு அமெரிக்காவின் பதிலடியாக மத்திய கிழக்கில் நிறுத்தப்பட்டு இருந்த யூஎஸ்எஸ் நிமிட்ஸ் வாஷிங்டன்னில் உள்ள கிட்சாப் கடற்படை தளத்திற்கு திரும்புகின்றது. இந்நிலையில் யூஎஸ்எஸ் விமானம் தாங்கி கப்பலில் இருந்து சுமார் 30 நிமிடங்களில் ஒரு போர் விமானமும் ஹெலிகாப்டரும் தென்சீனக்கடலில் விழுந்து விபத்துக்குள்ளது. இதில் எம்எச்-80ஆர் ஹெலிகாப்டரில் இருந்த 3 பணியாளர்கள் நேற்று முன்தினம் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். மேலும் சூப்பர் ஹார்னெட் போர் விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். 2 விபத்துக்களுக்கான காரணங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஐ)

## ஆப்கானிஸ்தான் – பாகிஸ்தான் எல்லையில் மீண்டும் மோதல்: 5 பாகிஸ்தான் வீரர்கள் பலி



ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே இரவு முழுவதும் நடந்த சண்டையில் ஒரு பாகிஸ்தான் இராணுவ நிலை தகர்க்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் முந்தைய வான்வழித் தாக்குதல்களுக்கு பதிலடி என்று ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் விவரித்தனர். தலிபான் படைகள் பல நிலைகளை குறிவைத்து, அவற்றைக் கைப்பற்றி சேதப்படுத்தியதாகவும் கூறினர்.

பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே சமீபத்தில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் பலர் உயிரிழந்தனர். பின்னர், கத்தாரில் நடைபெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தையில் சண்டையை நிறுத்த இருதரப்பும் ஒப்புக்கொண்டன.

இதனை தொடர்ந்து துருக்கில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் இதுவரை உடன்பாடு எட்டப்படவில்லை. இந்நிலையில், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் நேற்றுமுன் தினம் மீண்டும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் பாகிஸ்தான் பாதுகாப்புப்படை வீரர்கள் 5 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, ஆப்கானிஸ்தானில் இருந்து பயங்கரவாதிகள் பாகிஸ்தானுக்குள் நுழைய முயன்றதாகவும் அப்போது நடந்த மோதலில் 25 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்றதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது(ஐ)

## கம்போடியா–தாய்லாந்து அமைதி ஒப்பந்தம் அதிபர் டிரம்ப் முன்னிலையில் கையெழுத்து

அமெரிக்க அதிபர் முன்னிலையில் கம்போடியா-தாய்லாந்து போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. கடந்த ஜூலையில் தாய்லாந்து, கம்போடியா இடையே எல்லை பிரச்னையில் மோதல் ஏற்பட்டது. இதில் 40 பேர் பலியாகினர். இந்த மோதலை முடிவுக்கு கொண்டு வர மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம், அமெரிக்க அதிபர் டிரம்ப் மத்தியஸ்தம் செய்து தற்காலிகமாக போரை முடிவுக்கு கொண்டு வந்தனர். இந்நிலையில், தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பான ஆசியானின் 3 நாள் உச்சி மாநாடு கோலாலம்பூரில் நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அதிபர் டிரம்ப் கோலாலம்பூர் வந்தார். மாநாட்டில் கலந்து கொண்ட தாய்லாந்து பிரதமர் அனுதின் சர்ன்விராகுல், கம்போடியா பிரதமர் ஹன் மனேத் ஆகியோர் டிரம்ப் முன்னிலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி கம்போடிய கைதிகளை தாய்லாந்து விடுவிக்கும், தாய்லாந்து கைதிகளை கம்போடியா விடுவிக்க உள்ளது. இதில், பேசிய டிரம்ப், "தாய்லாந்து, கம்போடியா போரை முடிவுக்கு கொண்டு வருவதில் பெருமை கொள்கிறேன். 8 மாதங்களில் 8 போர்களைத் அமெரிக்கா தடுத்துள்ளது. இதற்கு முன் அதனை போல் எதுவும் நடந்ததில்லை. இனிமேலும் நடக்காது. ஒரு போரையாவது நிறுத்தியுள்ள அதிபர் உள்ளாரா? அவர்கள் போரைத் தொடங்குவார்கள், நிறுத்துவதில்லை," என்றார். (ஐ)



## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில்,

"இன்று மன்னார் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்றாக இந்த காற்றாலை விவகாரம் மாறியுள்ளது.

அரசு கூறுகின்றது குறித்த திட்டத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது. அது நடைமுறைப் படுத்தப்படும் என்று.

மன்னார் ஆயருடன் ஜனாதிபதி சந்தித்த போதும் இதையே கூறியிருந்தார். ஆனால், மன்னார் ஆயர் இன்றும் மக்களின் விருப்பத்தின் பக்கமே இருக்கின்றார்.

உலக நாடுகள் பலவற்றில் இன்றைய காலச் சூழலில் இயற்கை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

அதனால் அவர்கள் தங்கள் நாடுகளில் மக்கள் வாழிடம் அற்ற பகுதிகளில்தான் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதேநேரம் இந்தத் திட்டம் மன்னாரின் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் கடல் உயிரினங்களையும் பாதிக்கும் என எமது புவியியல் ஆய்வாளர் நாகமுத்து பிரதீபராஜாவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மக்களின் கோரிக்கை இன்று 80 நாள்களைக் கடந்து போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்களின் நலன்களில் நாமும் பங்காளர்களாக இருந்து அவர்களது போராட்டத்தையும் கோரிக்கையையும் வலுச் சேர்க்க முடிவு செய்துள்ளோம்." - என்றார்.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிராக எதிரணிகளுடன் இணைந்து பயணிக்கக் கூடிய இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயற்படும் என்றும் அவர் கூறினார்.

அநுர அரசின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராகவே எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் பேரணியை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன திட்டமிட்டுள்ளன.

## வெலிகம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமசேகர படுகொலையுடன் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள பிரதான துப்பாக்கிதாரிக்கு மோட்டார் சைக்கிளைக் கொடுத்து உதவி செய்தவர், மோட்டார் சைக்கிளைப் பழுது பார்த்தவர் மற்றும் பிரதான துப்பாக்கிதாரிக்கு உதவிய ஓட்டோ சாரதி ஆகியோரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

# மூன்று கொலைகளுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி ஹெரோயினுடன் கைது



அநுராதபுரத்தில் 106 கிராம் ஹெரோயினுடன் 3 கொலைகளுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மாலை அனுராதபுரத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கைதானவர்களில் 44 வயதான இராணுவ சேவையில் இருந்து இடைவிலகிய ஒருவரும், 40 மற்றும் 30 வயதுடைய இரண்டு போதைப்பொருள் வர்த்தகர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரியாக சந்தேகிக்கப்படும் நபர், டுபாயில் உள்ள ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை கைது செய்த போது அவரிடமிருந்து 88 கிராம் 490 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பீடி இலைகளுடன் டிங்கி படகு மீட்பு





இலங்கை கடற்படையினர், திங்கட்கிழமை அன்று கற்பிட்டி துடாவ கடற்கரை மற்றும் கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட சுமார் 956 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு டிங்கி படகை கைப்பற்றியுள்ளனர்.

கடற்படை நடவடிக்கைகளின் காரணமாக கரைக்கு கொண்டு வர முடியாததால், கடலிலும் கடலோரப் பகுதியிலும் கடத்தல்காரர்களால் கைவிடப்பட்ட நிலையிலேயே இவைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் இருபது படகுகள் கண்காணிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# யாழ் இளைஞர்களிடம் அதிகரிக்கும் வன்முறை- பொலிஸார் தீவிர விசாரணை!

யாழில் இளைஞன் ஒருவனின் கையடக்க தொலைபேசியில் கைத்துப்பாக்கிகள் காணப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ். நல்லூர் - அரசடி பகுதியில் இளைஞன் ஒருவன் போதைப்பொருள் மற்றும் சிறிய வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞனின் நண்பர்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது நேற்றைய தினம் ஒரு இளைஞனை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின் போது அவரது கையடக்க தொலைபேசியையும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது வாட்ஸ் அப் செயலியில் இன்னுமொரு இளைஞன், கைத்துப்பாக்கி மற்றும் தான் கைத்துப்பாக்கியுடன் காணப்படும் படத்தினை அனுப்பி இருந்தமையை பொலிஸார் கண்டறிந்திருந்தனர்.

இது தொடர்பில் இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கைத்துப்பாக்கியுடன் காணப்பட்ட இளைஞன் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடொன்றில் இருந்து வெளிநாட்டு சிகரெட்டுகள் பறிமுதல்



நீர்கொழும்பு, போலவலான, மடமா வீதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து 233,200 வெளிநாட்டு சிகரெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், களனி சிறப்பு அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த சிகரெட்டுகள் நேற்று (26) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபான வரி செலுத்துவதில் மாற்றம்

*மதுபான உற்பத்தி மீதான வரி செலுத்தும் காலக்கெடு மற்றும் கட்டணங்களை வசூலிப்பதற்கான விதிகளை திருத்தி புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.*

*நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த வர்த்தமானி இன்று (28) முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.*

*சுங்கச் சட்டத்தின் 22வது பிரிவின் கீழ் ஒவ்வொரு உரிமதாரரும் குறித்த தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ வரியைச் செலுத்த வேண்டும் என குறித்த வர்த்தமானியின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, குறித்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய முழு வரியையோ அல்லது கட்டணத்தையோ செலுத்தத் தவறும் உரிமதாரரின் போத்தல் நிரப்பும் உரிமத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்தச் சட்டம் இதற்கு முன்னர் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்றும், இது ஒரு புதிய சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அத்துடன் குறித்த தினத்தில் இருந்து 90 நாட்களுக்கு மேலாக செலுத்த வேண்டிய முழு வரியையோ அல்லது கட்டணத்தையோ செலுத்தாமல் இருந்தால், அந்த உரிமதாரரின் அனைத்து உரிமங்களும் இடைநிறுத்தப்படும் என புதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

*இதற்கு முன்னர் உரிமங்களை இடைநிறுத்துவதற்கான காலம் 6 மாதங்களாக இருந்தது. தற்போது புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அது 3 மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. மதுவரி செலுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கில் இந்த புதிய வரி செலுத்தும் காலக்கெடு திருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!